# சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

(சட்டமியற்றுத்துறை)

புது டில்லி, 2018, ஆகஸ்ட் 11

பின்வரும் நாடாளுமன்றச்சட்டம், குடியரசுத்தலைவரின் இசைவினை 2018, ஆகஸ்ட் 11 அன்று பெற்று, பொது தகவலுக்காக ஈங்கிதனால் வெளியிடப்படுகிறது:-

## அரசமைப்பு (நூற்று இரண்டாம் திருத்தச்) சட்டம்,2018

**[2018, ஆகஸ்ட் 11 ]**

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், அரசமைப்பு (நூற்று இரண்டாம் திருத்தச்) சட்டம்,2018 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, குறித்திடலாகும், அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2. அரசமைப்பின் 338 ஆம் உறுப்பில்,(10) ஆம் கூறில், 338ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

“குடியரசுத்தலைவர் 340 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின்படி அமர்த்தப்படும் ஓர் ஆணையத்தின் அறிக்கையைப் பெற்றதன் மேல், ஆணையின்வழி குறித்துரைக்கும் பிற பிற்பட்ட வகுப்புகளையும், அத்துடன்” என்ற

சொற்களும் அடைப்புக் குறிகளும் மற்றும் எண்களும் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**3.**அரசமைப்பின் **338**அ உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது;- புதிய உறுப்பு **338** ஆ புகுத்தப்படுதல்.

**“338 ஆ பிற்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம்:**

**(1)** பிற்பட்ட வகுப்பினருக்கான தேசிய ஆணையம் என்று அழைக்கப்பெறும் ஆணையம் ஒன்று சமுதாய நிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினருக்காக இருத்தல் வேண்டும்.

**(2)** நாடாளுமன்றத்தினால் இதன் பொருட்டு இயற்றப்படும் சட்டம் ஒன்றன் வகையங்களுக்கு உட்பட்டு, தலைவர், துணைத்தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இந்த ஆணையம் இருக்கும்; மேலும், அவ்வாறு அமர்த்தப்பெறும் தலைவர், துணைத்தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரின் பணிவரைக்கட்டுகளும் பதவிக்காலமும் குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின்படி இருக்கும்.

**(3)** ஆணையத்தின் தலைவர், துணைத்தலைவர், பிற உறுப்பினர்கள் ஆகியோரை குடியரசுத்தலைவர், தம் கையொப்பமும் முத்திரையும் கொண்ட அதிகார ஆணையின் வழி அமர்த்துவார்.

**(4)** ஆணையம், தனக்குரிய நெறிமுறையை ஒழுங்குறுத்த அதிகாரம் உடையது ஆகும்.

(5) பின்வருவன ஆணையத்தின் கடமைகள் ஆகும் -

(அ) இந்த அரசமைப்பின்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் ஒன்றன்படி அல்லது அரசாங்க ஆணை ஒன்றன்படி சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினருக்கு வகைசெய்யப்பட்டுள்ள காப்பணைவுகள் தொடர்பான பொருட்பாடுகள் அனைத்தையும் ஆய்ந்து காணுதல் மற்றும் கண்காணித்தல்; மேலும், அந்தக் காப்பணைவுகளின் செயற்பாட்டு விளைபயனைக் கணித்தல்;

(ஆ) சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினரின் உரிமைகளும் காப்பணைவுகளும் பறிக்கப்படுவது பற்றிய குறிப்பிட்ட முறையீடுகளை விசாரணை செய்தல்;

(இ) சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினரின் சமூக –பொருளியல் வளர்ச்சியில் பங்கேற்றல் மற்றும் அறிவுரை வழங்குதல் ; மேலும், ஒன்றியத்திலும் மாநிலம் எதிலும் அவர்கள் வளர்ச்சியில் ஏற்படும் முன்னேற்றத்தைக் கணித்தல்;

(ஈ) அந்தக் காப்பணைவுகளின் செயற்பாடு பற்றிய அறிக்கைகளை ஆண்டுதோறும் மற்றும் ஆணையம் பொருத்தமெனக் கருதும் பிற காலங்களிலும் குடியரசுத்தலைவரிடம் முன்னிடுதல்;

(உ) சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட

வகுப்பினருக்கான காப்பணைவுகளையும் அவர்களுடைய பாதுகாப்பு, நல்வாழ்வு, சமூக –பொருளியல் வளர்ச்சி ஆகியவற்றிற்கான பிற நடவடிக்கைகளையும் திறம்படச் செயற்படுத்து- வதற்காக , ஒன்றியம் அல்லது ஒரு மாநிலம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அத்தகைய அறிக்கைகளில் பரிந்துரைகள் செய்தல்; மற்றும்

(ஊ) சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினருக்கான பாதுகாப்பு, நல்வாழ்வு, வளர்ச்சி, மேம்பாடு ஆகியவை தொடர்பாக, நாடாளுமன்றம் இயற்றும் சட்டம் ஒன்றின் வகையங்களுக்கு உட்பட்டு, குடியரசுத்தலைவர் வகுக்கும் விதிகளின்படி செயற்பணிகளை ஆற்றுதல்.

(6) அத்தகைய அறிக்கைகள் அனைத்துடனும், ஒன்றியம் தொடர்பான பரிந்துரைகளின் மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும் அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, நாடாளுமன்ற ஈரவைகளின் முன்பும் வைக்குமாறு

குடியரசுத்தலைவர் செய்விப்பார்.

(7) அத்தகைய அறிக்கை எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும், ஒரு மாநில அரசாங்கம் தொடர்புடைய பொருட்பாடு

குறித்ததாயிருக்குமிடத்து, அத்தகைய அறிக்கையின் படியொன்று, மாநில அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும், அது, அத்தகைய அறிக்கையுடன் மாநிலம் தொடர்பான பரிந்துரைகளின் மீது எடுக்கப்படும் அல்லது எடுக்கக் கருதப்படும் நடவடிக்கையையும், அத்தகைய பரிந்துரைகளில் எவையும் ஏற்றுக்கொள்ளபடாவிடின், அதற்கான காரணங்களையும் விளக்குகின்ற விவரக்குறிப்புடன் சேர்த்து, மாநிலச் சட்டமன்றத்தின் முன்பு வைக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

(8) ஆணையமானது, (5) ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட பொருட்பாடு எதனையும் ஆய்ந்து காண்கையில் அல்லது (ஆ) உட்கூறில் சுட்டப்பட்ட முறையீடு எதனையும் விசாரணை செய்கையில், உரிமை வழக்கு ஒன்றை விசாரணை செய்யும் ஓர் உரிமையியல் நீதிமன்றம், குறிப்பாக பின்வரும் பொருட்பாடுகளைப் பொறுத்து, கொண்டிருக்கும் அனைத்து அதிகாரங்களையும் உடையது ஆகும்:-

(அ) இந்தியாவின் எந்தவொரு பகுதியிலிருந்தும் நபர் எவரையும் அழைப்பாணை அனுப்பித் தன் முன் வரவழைத்தல் மற்றும் ஆணைமொழியின் மீது அவரை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு வேண்டுறுத்தல்;

(இ) ஆணையுறுதி ஆவணங்களைச் சான்றாக ஏற்றல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலிருந்தும் அரசுப் பதிவணம் அல்லது அதன் படி எதனையும் பெறுவதற்கு வேண்டுதலாணை இடுதல்;

(உ) சாட்சிகளை விசாரணை செய்வதற்காகவும் ஆவணங்களை ஆய்வு செய்வதற்காகவும் பணிப்பாணைகளைப் பிறப்பித்தல்;

(ஊ) குடியரசுத்தலைவர், வகுக்கும் விதிகளில் கூறப்படும் மற்றபிற பொருட்பாடுகள்.

(9) ஒன்றியமும், ஒவ்வொரு மாநில அரசாங்கமும் சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினரைப் பாதிக்கும் முக்கியமான கொள்கைகள் அனைத்திலும் ஆணையத்தைக் கலந்தாய்வு செய்தல் வேண்டும்."

4. அரசமைப்பின் 342 ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- புதிய உறுப்பு 342 அ புகுத்தப்படுதல்.

**"342அ. சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினர்:**

(1) மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிநிலவரை எதனைப் பொறுத்தும், அது ஒரு மாநிலமாக இருக்குமிடத்து அதன் ஆளுநரைக் கலந்தாய்வு செய்த பின்பு, அந்த மாநிலம் அல்லது, நேர்வுக்கேற்ப, ஒன்றியத்து ஆட்சிநிலவரை தொடர்பாக, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை சமூதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட

வகுப்புகள் என்று கொள்ளப்படவேண்டிய வகுப்புகள் எவை என்று குடியரசுத்தலைவர் பொது அறிவிக்கை வாயிலாகக் குறித்துரைக்கலாம்.

(2) நாடாளுமன்றம், சட்டத்தினால் சமுதாய- நிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பு எதனையும் (1) ஆம் கூறின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினரின் மைய வரிசைத் தொகுப்பில் சேர்க்கலாம் அல்லது அத்தொகுப்பிலிருந்து நீக்கிவிடலாம்; ஆனால், மேலேகண்டவாறன்றி, மேற்சொன்ன கூறின்படி பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிக்கையானது, பிந்திய அறிக்கை எதனாலும் மாறுதல் செய்யப்படுதல் ஆகாது."

(5) அரசமைப்பின் 366 ஆம் உறுப்பில், (26ஆ) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 366 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

'(26இ) "சமுதாயநிலையிலும் கல்விநிலையிலும் பிற்பட்ட வகுப்பினர்" என்பது, இந்த அரசமைப்பினைப் பொறுத்தவரை, 342அ உறுப்பின்படி அத்தகைய பிற்பட்ட வகுப்பினர் எனக் கொள்ளப்படுகின்ற பிற்பட்ட வகுப்பினர் என்று பொருள்படும்;'.